**DEPOSITION OF WITNESS**

( Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE DISTRICT MUNSIF -CUM-JUDICIAL MAGISTRATE,

KILPENNATHUR.

| | | | |
|---|---|---|---|
| Calender | | Case No. | : CC –352/2025 (/20) |
| Deposition of witness for | | Prosecution : | LW 4 – PW 4 |
| | | Defence | : |
| | | Court | : |
| Name | : துரைராஜ் | Father's Name: | லட்சுமணன் |
| | | Husband Name: | |
| Village/Town : | பசுங்கரை | Taluk | : |
| | | Calling | : விவசாயம் |
| | | Age | : 25 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16.03.2026

**எதிரி ஆஜர்.**

**சாட்சியின் அடையாளம் வேட்டவலம் காவல் நிலைய தலைமைக் காவலர் திரு. ரத்தினவேல் என்பவரின் மூலம் உறுதிசெய்யப்பட்டது.**

**<u>முதல் விசாரணை</u> :**

நான் தற்போது பசுங்கரை கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 சுசீலா எனது பாட்டி ஆவார். கடந்த 09.07.2020ம் தேதியன்று காலை 5.30 மணியளவில் நான் வீட்டில் இருந்த போது எனது தாத்தா குப்பன் வேளானந்தல் கிராமத்திற்கு டீ குடிப்பதற்காக பசுங்கரை ரவி என்பவரின் வீட்டிற்கு எதிரே ரோட்டிற்கு இடதுபுறமாக நடந்து சென்றுக்கொண்டிருந்ததாகவும், அவருக்கு பின்னால் வந்த ஹிரோ ேஹாண்டா ஸ்பெலெண்டர் + என்ற வாகனம் வேகமாக வந்து எனது தாத்தாவின் மீது மோதியதில் தலையில் அடிப்பட்டு மயங்கி மூக்கில் ரத்தம் வந்துக்கொண்டிருந்ததாக அங்கிருந்தவர்கள் போன் மூலம் எனக்கு

தகவல் சொன்னார்கள். உடனே நான் விபத்து நடந்த இடத்திற்கு சென்று பார்த்த போது எனது தாத்தா தலையில் அடிப்பட்டு மயங்கியிருந்தார். நான் சென்று பார்த்த போது இருசக்கரவாகனத்தை ஓட்டிவந்து விபத்து ஏற்படுத்திய நபரை நான் பார்த்தேன் தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரிதான் அந்த ஓட்டுநர் என ஆஜர் எதிரியை சாட்சி அடையாளம் காட்டுகிறார். சம்பவயிடத்தில் அவருடைய இருசக்கர வாகனத்தையும் பார்த்தேன். அந்த இருசக்கர வாகனத்தின் பதிவெண். TN 10 AJ 9919 ஆகும். உடனே 108 ஆம்புலென்ஸ்க்கு போன் செய்து வரவழைத்து திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பிவைத்தோம் அங்கு மருத்துவர்கள் அவரை மேல் சிகிச்சைக்காக வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். அங்கு சிகிச்சைப்பலனின்றி எனது தாத்தா குப்பன் இறந்துவிட்டார். போலிசார் மருத்துவமனைக்கு வந்து எனது தாத்தாவின் பிரேதத்தை பிரேத பரிசோதனை முடித்து எங்களிடம் ஒப்படைத்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்குவிசாரணை**

நான் விபத்தை நேடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்து சுமார் 20 நிமிடங்கள் கழித்துதான் நான் அங்கு சென்றேன் என்றால் சுமார் 10 நிமிடத்திற்குள் சென்றுவிட்டேன். விபத்து நடந்த நேரம் என்பது அதிகாலை என்றால் சரிதான். விபத்து சம்மந்தமாக போலிசார் என்னை எப்போது எங்கு விசாரித்தார்கள் என்றால் 09.07.2020ம் தேதியன்று மாலைநேரத்தில் என் வீட்டின் அருகே விசாரித்தார்கள். என்னை போலிசார் விசாரித்தபோது ரவி என்பவரின் வீட்டின் அருகே விபத்து

நடந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த விபத்து சம்மந்தமாக நான் தான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். என்னை அடுக்கம்பாறை மருத்துவமனையில் வைத்து ஏதும் போலிசார் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். எனது தாத்தா வயது முதிர்வின் காரணமாக நிலைத்தடுமாறி தான் கீழே விழுந்தார் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த விதமான சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி நான் முதன்முறையாக இந்த நீதிமன்றத்தில் எதிரியை சம்பவயிடத்தில் வைத்து பார்த்தேன் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் மேற்படி போலிசாரின் விசாரணையில் அவ்வாறு சம்பவயிடத்தில் எதிரியை பார்த்ததாக ஏதும் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்ட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/- M.C.Arun
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்

**(அரசுத்தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக அறிவிக்கக் கோரி அவ்வாறு அனுமதிக்கப்பட்டு அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை)**